சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்
SC.229/2017

இந்நீதிமன்றத்தின் எழுத்தர் திருமதி.ரேவதி, Grade-II Bench Clerk, என்பவரால் முறையோடு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அரசு தரப்பில் 1ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு 2020ம் ஆண்டு மார்ச் திங்கள் 3ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்.திருவேங்கடம் (PW7) | நாள் 03.03.2020 |
| த/பெ.முத்துகிருஷ்ணன் | தொழில் |
| வயது. | வட்டம் |
| கிராமம்.புளியரனைங்கோட்டை | |

<u>அ.சா.7 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு அரசு தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்.</u>

நான் புளியரனை கோட்டையில் குடியிருந்து புரோகிதம் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இவ்வழக்கின் சாட்சிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளுக்கும் சாட்சிகளுக்கும் இடையில் நடந்ததாக சொல்லப்படும் தகராறு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. அன்றைய தினம் நான் அருங்குணத்தில் திவஷம் செய்வதற்காக சென்றுவிட்டேன். மறுநாள் ஆஜர் எதிரிகளுக்கும் நடராஜனுக்கும் தகராறு ஏற்பட்டதாக கேள்விபட்டேன், யாருக்கு அடிப்பட்டது என்று எனக்கு தெரியாது, எங்கு அடிப்பட்டது என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் 2வதாக உள்ள கையெழுத்தில் என்னுடைய பெயர் எழுதப்பட்டுள்ளது, அது என்னுடைய கையெழுத்து இல்லை. என்னை போலிசார் விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டதற்கு இணங்க அனுமதி வழங்கப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 25.04.2016ம் தேதியில் எங்கள் ஊரை சேர்ந்த வீரராகவனும் நானும் சேர்ந்து

நடராஜன் என்பவரின் கழனியில் பரம்பு ஓட்டிக்கொண்டிருக்கும் போது சித்தாமூர் காவல் நிரைலய உதவி ஆய்வாளர் ஆஜர் எதிீாகளுக்கும் நடராஜன் குடும்பத்தினருக்கும் இடையில் நடைபெற்ற சண்டை குறித்து சம்பவ இடமான கழனியை என் முன்னிலையிலும் வீரராகவன் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும் அதற்கு சாட்சியாக நானும் வீரராகவனும் கையெழுத்து செய்ததாக சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)